4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No.9 /2022 நாள்: 22.01.2026 ம.சா.2– ராஜேந்திரன்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர் எனக்கு உறவினர் தான். அவர்கள் கேட்டு கொண்டதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து கோவை, சரவணம்பட்டி, அம்மையப்பன் ஹோட்டல் முன்பு நடந்தது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் 4 ரோடு சந்திக்கும் இடம் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் தான் காவல் துறையினரிடம் குற்ற புகார் மனு கொடுத்தேன். விபத்து நடந்த சமயத்தில் விபத்து நடந்த இடத்திலிருந்து 10 அடி தள்ளி தான் நான் நின்று கொண்டிருந்தேன். விபத்து சமயத்தில் இறந்துபோன நபர் மேற்கிலிருந்து கிழக்காக செல்லவில்லை, தெற்கிலிருந்து வடக்காக சென்றார். விபத்திற்கு காரணமான பேருந்து இறந்துபோனவர் ஓட்டி வந்த திசைக்கு பின்னால் தான் வந்து கொண்டிருந்தது. மேற்படி பேருந்து தெற்கிலிருந்து வடக்காக பின்னால் வந்து கொண்டிருந்த போது மேற்படி பேருந்தை இடது பக்கமாக TN 99 9480 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் , முந்த முற்பட்டு இறந்துபோனவர் ஓட்டி சென்ற வாகனத்தின் பின்னால் மோதியதால் இறந்துபோனவர் நிலைதடுமாறி கீழே விழுந்தபோது பின்னால் வந்த பேருந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது என்றால் சரிதான். விபத்து TN 99 9480 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் வந்தவர் மோதியதால் தான் விபத்து இறந்தவருக்கு ஏற்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி 1வது எதிர்மனுதாரர் விபத்தை ஏற்படுத்தாவிட்டால் பேருந்து இறந்தவர் மீது மோதியிருக்காது என்றால் சரிதான். விபத்திற்கு 1வது எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதை தான் காரணம், 2வது எதிர்மனுதாரரான பேருந்து ஓட்டுநர் விபத்திற்கு காரணமில்லை என்பதால் 3 வது எதிர்மனுதாரரான நிர்வாகம் இழப்பீடு செலுத்த கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. பேருந்தை பெரிய வாகனம் என்பதால் பேருந்து ஓட்டுநரையும் சேர்த்து தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பாக இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு விசாரணையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.01.22 14:33:54 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.